**தலைப்பு – 217 நன்னடத்தை மற்றும் சிறுவர்பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 217 - நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆலோசனை கட்டணத்தையும் உள்ளடக்கி ரூபா 2,350,000 கிரியத்தினை செய்து ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பாக விஞ்ஞாபனத்தை அமுல்படுத்தும் போது காலரீதியில் மற்றும் சரியான அறிக்கை சமர்ப்பித்தலின் தேவைக்காக 2018 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட UNCRC தரவு முறைமை நிதியல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தரவு முறைமையை அமுல்படுத்தாமல் பயனற்று காணப்பட்டது. | UNCRC தரவு முறைமையின் தேவையை இனங்காணல் மற்றும் வடிவமைக்கும் நடவடிக்கைகளை உள்ளடக்கிய சகல பெறுகைகள் மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகள் அமைச்சின் மூலமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சொத்தொன்றாக இந்த முறைமையை இனங்காண வேண்டுமாயின் அவ்வாறே இனங்கண்டு அமைச்சின் சொத்துக்கள் பதிவேட்டடில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என கண்டறிந்து அவ்வாறு உள்ளடக்கப்படவில்லையாயின் எங்களின் சொத்துப் | தொழில்நுட்ப மென்பொருள் முறைமை சொத்தாக இனங்காண வேண்டியிருந்ததுடன், அந்த தரவு முறைமையை அமுல்படுத்துவதை கண்காணித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதான பணிகளுக்கு இடையே காணப்படுகின்ற சிறுவர் அடிப்படை ஆராய்ச்சிகளை நடத்துவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வருடத்தில் 03 சிறுவர் அடிப்படை ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு திட்டமிட்டு ரூபா 95,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும், ஆண்டில் சிறுவர் அடிப்படை ஆராய்ச்சி எதுவும் மேற்கொள்ளப்படாமையால் திணைக்களத்தின் பிரதான பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | இந்த காலப் பகுதியில் காணப்பட்ட உக்கிரமான எரிபொருள் நெருக்கடி, சிறுவர்களை ஒன்று சேர்ப்பதில் வசதியீனம், கொரோனா தொற்று நோய் நிலைமையினால் முழுமையாக ஒன்று சேர்க்க முடியாமை போன்ற நடைமுறை ரீதியிலான பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. இதன் காரணமாக திட்டமிடப்பட்ட வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சிறுவர் உரிமைகள் விஞ்ஞாபனத்தை அமுல்படுத்துதல் மற்றும் சிறுவர்களுக்கு பொருத்தமான சுற்றாடலை வடிவமைப்பதற்காக பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் செயற்குழுவை செயற்பாட்டை தொடர்ச்சியாக நடாத்திச் | ஆண்டின் போது 1340 கூட்டங்களை நடாத்துவதற்கு நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், சில பிரதேச செயலகங்களுக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமை மற்றும் காலாண்டு முறைமையில் பாதீடு ஒதுக்கப்பட்டமையால் கட்டுநிதி பெற்றுக்கொள்வதில் | மொத்த நிதி ஏற்பாட்டில் 95 சதவீதம் செலவிடப்பட்டமை யால் கட்டுநிதி பெற்றுக் கொள்ளும் வசதியீனத்தின் அடிப்படையில் குழு கூட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | செல்லும் நோக்கில் மீளாய்வாண்டில் 25 மாவட்டங்களில் 335 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக ரூபா 3,249,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஒரு காலாண்டிற்கு ஒரு பிரதேச செயற்குழு வீதம் ஆண்டில் 1340 கூட்டங்கள் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்ட போதிலும், உரிய கோவைகளை பரிசோதனை செய்த போது 405 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டு ரூபா 3,080,000 செலவினம் செய்யப்பட்டிருந்தது. ஆண்டில் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை, குழுக் கூட்டங்களை நடாத்துதலின் செயல் முன்னேற்றம் 30 சதவீதமாகவும் நிதிசார் செயல் முன்னேற்றம் 95 சதவீதமாகவும் இருந்தது. | வசதியீனத்தின் அடிப்படையில் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு வசதியீனமாக இருந்தது. | நடாத்துவதற்கு வசதியீனமாக இருந்தமையை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சிறுவர் செயற்குழு நடாத்துதலின் கோலைவகள் மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் சிறுவர் செயற்குழு நடாத்தப்பட்டமையை உறுதிப்படுத்தாத குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை 935 ஆக இருந்ததுடன், அது 70 வீத உயர் சதவீத்ததை கொண்டிருந்தது. | சிறுவர் உரிமைகள் மேம்படுத்தல் உத்தியோகத்தர்/ சிறுவர் உரிமைகளை மேம்படுத்தல் உதவி உத்தியோகத்தரினால் அமுல்படுத்தப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளின் காரணமாக செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்படவில்லை. எனினும், தொலைபேசி மற்றும் வட்சப் மூலம் தகவல்களை பெற்று நாளதுவரையாக்கப்பட்ட போதும் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கோவையில் உள்ளடக்கப்படவில்லை. | செயல் முன்னேற்றம் முறையாக பெற்றுக் கொள்வதற்கும் கோவைகளை நாளதுவரையாக பேணிச் செல்லவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2022 இல் அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இரட்டைக் குழந்தைகளுக்கு உதவிகளை வழங்குவதற்காக 142 குடும்ப அலகுகள் இலக்கிடப்பட்டு ரூபா 1,098,500 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டில் ரூபா 1,076,000 செலவிடப்பட்டு 98 சதவீத செயல் முன்னேற்றம் பெறப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளின் படி 86 குடும்பங்களுக்கு மாத்திரம் நிதி உதவிப் பணம் வழங்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதில் உதவி பணம் பெற்றமைக்கு 56 குடும்ப அலகுகளினால் பற்றுச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இரட்டைக் குழந்தை உதவிப்பணம் வழங்கப்பட்ட குடும்ப அலகுகள் 135 இற்குரிய நிதி ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்த போதும், பெப்ரவரி முதல் ஆகஸ்ட் மாதத்தின் இறுதி அரைப் பகுதி வரை சிறுவர் உரிமை மேம்படுத்தல் உத்தியோகத்தர்/ உதவி உத்தியோகத்தரினால் அமுல்படுத்தப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக செயல் முன்னேற்ற அறிக்கை திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தின் போது உரிய பிரகாரம் பதிவேடுகளை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயல்முன்னேற்ற அறிக்கை உரிய பிரகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், வழங்கப்பட்டுள்ள உதவிப் பணத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியுமான வகையில் கோவைகள் முறையாக நாளது வரையாக்கப்படல் வேண்டும். |

## 2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறு தவறுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிதி சுற்றறிக்கை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கொறக்கான, கல்கனுவ வீதியில் அமைந்துள்ள திணைக்களத்திற்குரிய சில கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் போது கொவிட் சிகிச்சை நிலையமான பயன்படுத்துவதற்காக களுத்துறை மாவட்ட செயலாளரின் கோரிக்கைப் படி வழங்கப்பட்டிருந்தது, பிரதேச செயலகத்தால் அந்த நிலையங்களில் காணப்பட்ட தற்காலிக நிர்மாணங்கள் 2023 சனவரி மாதம் அகற்றப்பட்டிருந்ததுடன், தற்போது வைத்தியசாலையாக பயன்படுத்தப்படுகின்ற நிலையத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | காணப்படுகின்ற வளங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவி 2014 ஆகஸ்ட் மாதம் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | 28 விண்ணப்பதாரர்களுக்காக 2022.04.06 மற்றும் 07 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது. எனினும், தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இருக்காமையினால், ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. இதன் மூலம் தற்போது நிதி அமைச்சின் மூலம் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் பிரகாரம் ஆட்சேர்பபு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |